# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 241 நாள் : 25.06.2026

**மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ.மரியவில்சன் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலையில் இரயில்வே 2ஏ சந்திக்கடவில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கும் பணியினை இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ.மரியவில்சன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலையில் இரயில்வே 2ஏ சந்திக்கடவில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கும் பணியினை இன்று (25.06.2026) தொடங்கி வைத்தார்.

இந்த மேம்பாலம் கொருக்குப்பேட்டை எண்ணூர் நெடுஞ்சாலை –இரயில்வே 2ஏ சந்திக்கடவில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் 450 மீட்டர் நீளமும், 11 மீட்டர் அகலமும் கொண்ட இந்த மேம்பாலம், 5 மீட்டர் அகல நடைபாதையுடன் கூடிய சேவை சாலைகள் உள்ளிட்ட வசதிகளுடன், நாளொன்றுக்கு சுமார் 25 ஆயிரம் வாகனங்கள் தடையின்றி செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**